
Book 21

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்




மே
2001
May

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 2

மே 2001
நினைவு 4

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுசைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

★ பிரபஞ்சநாதம்

★ அனைவரும் குற்றவாளிகளே

★ நிச்சயிக்கப்பட்ட வெற்றி

★ உலக இறுதி நாள் பற்றி - ஓர் ஆய்வு

# பிரபஞ்ச நாதம்

ஏப்ரல் இதழின் தொடர்ச்சி

ஷரீஃப் கான் / தமிழில் சுப்பிரமண்யம் ராஜன்.

ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் தெளிவாகத் தெரிகிற ஒன்றை இவர்கள் கவனிக்கத் தவறி விட்டார்கள்.

எந்த விதமாக நீங்கள் மகிழ்ந்து கிடந்தீர்கள் என்பதல்ல. மாறாக எந்த நேரத்தில் மகிழ்ச்சிக் குளத்தில் மூழ்கி உற்சாக முத்துக்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான்!

இறைவன் நமக்கு விதித் திட்ட வாழ்வியல் - கடமைகளை புறக்கணித்து விட்டு மகிழ்ச்சியில் புரண்டு கொண்டிருக்கிறோமா? என்பதுதான்! அப்போது அது பிழையான செயலாகிறது. 'கிரிக்கெட் - மாட்ச்சைப் பார்த்து ரசித்துக் கொண்டே தொழுகை நேரங்களைத் தவற விடுவோமானால் அது பிழையான செயல் 'ஹராம்' ஆகும்.

அதற்கு 'கிரிக்கெட்' விளையாட்டு 'ஹராம்' என்பதல்ல பொருள். தொழுகை நேரத்தை தவறவிட்டதுதான் தவறு ஆகும். நீங்கள் உங்கள் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்துவிட்டு தொழுகைகளை விட்டுவிடுவீர்களானாலும், குழந்தைகளோடு விளையாடியது தவறு அல்ல. தொழுகைகளை விட்டதுதான் தவறு ஆகும்.

காற்று, தண்ணீர் ஆகியவற்றைப் போன்று ஓசை அல்லது இசை வாழ்வின் அத்தியாவசியமான ஒரு அங்கம்! அதனை முறையாக பயன்படுத்த வேண்டும். இசை தடுக்கப்பட்டதல்ல! சிலருக்கு இறைவனின் வார்த்தைகளை விட மனிதர்களின் வார்த்தைகளே பிடித்திருக்கின்றன.

நபிதோழர்கள், நபிவழித்தோன்றல்கள். 'தப்ஸீர்' (குர்ஆன் விளக்கவுரை) எழுதிய அறிஞர்கள். 'அல்- குதாபி'. 'அத்-தாஹா' 'இப்னு ஜாரீர்' இன்னும்பிறர் கூறியதாக கூறப்படும் வார்த்தைகளே இறைவனின் வார்த்தைகளைவிட மேலானதாகவும் இனிமையானதாகவும் தெரிகின்றன!!

### 2. 17:64 இஸ்ரேலின் பிள்ளைகள்

இறைவன் சைத்தானை பார்த்து கூறுகிறார், "உன் குரல் வளத்தினால் அவர்களில் யாரை வேண்டுமானாலும் நீ வழிகெடச் செய்யலாம்!, உன்

படைகளைக் கொண்டு அவர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்கி வீழ்த்தலாம்! அவர்களது செல்வத்திலும் வாரிசுகளிலும் ஆதிக்கம் செய்யலாம்! அவர்களை சத்தியங்கள் செய்ய வைத்து வரம்பு மீறும்படி செய்யலாம்! சைத்தான் அவர்களை அடையச் செய்வது இழிவைத் தவிர வேறொன்றுமில்லை!"

மேற்படி வசனத்தில் சைத்தானின் 'குரல்வளம்' Voice குறிப்பிடப்படுவதால் இவ்வசனம் இசையையும் பாடலையும் தடை செய்வதாக விளக்கமளிக்கிறார்கள். தங்கள் தவறான புரிதலுக்கு நியாயம் கற்பிப்பதற்காக இறைவனுக்கு இணையாக மனிதர்களை நாடுகிறார்கள்.

இவர்கள் சைத்தானின் குரல்வளத்தின் மேல் உள்ள கோபத்தில் 'குரல்' எனும் அருட்கொடையையே தடை செய்வார்களா? அப்படியானால் பேச்சும்' தடை செய்யப்பட்டுவிடும். சைத்தான் பேசுகிறான் என்பதற்காக பேச்சே ஹராம் என்பதா?

'குரல்வளம்' இறைவனால் தடைசெய்யப்படவில்லை. இறைவன், தான் தடை செய்ய நாடிய விசயங்களை தெளிவாகவும், நேரடியாகவும், விளங்கும்படியும் கூறுபவர் ஆவார்.

'இப்னு - அப்பாஸ்' தரும் 'ஹதீஸ்' விளக்கத்தில் மேற்படி இறைவசனம் 17:64ல் 'குரல்வளம்' பற்றி கூறியுள்ளார். இறைவனுக்கு கீழ்படியாமல் நம்மை ஆக்கிவிடுகிற எந்த குரல்-ஓசை ஆனாலும் அது 'ஹராம்' தான் என்கிறார். யாராவது ஒருவருடன் இனிமையாக பேசிக் கொண்டு இருப்பவர் இறைவனுக்கான கடமைகளை நிறைவேற்றாது அவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் அவர் மீதுதான் 'பிழை' யே தவிர இனிமையான பேச்சு 'ஹராம்' ஆகாது.

இறைவனின் வார்த்தைகள் அவர்களுக்கு பிடிக்கவில்லை, விளங்கவில்லை, மாறாக இப்னு - அப்பாஸ் என்பவர் யார் என்றே தெரியாவிட்டாலும் அவர் கூற்றுக்கு விரும்பி செவி சாய்க்கிறார்கள்.

### 3. 31:6 லுக்மான்

"மனிதர்களில் சிலர் வீண் பேச்சுக்களிலும், வரட்டு வாதங்களிலும் ஈடுபடுகின்றனர். தாங்கள் அறியாமையில் மூழ்கிக் கிடப்பதோடு, பிறரையும் இறைவனது வழிகாட்டலில் இருந்து விலகிச் சென்றுவிட ஏவுகிறார்கள். இவர்களுக்கு இழிவூட்டும் தண்டனை நிச்சயமாக உண்டு."

மேற்படி வசனத்தில் “வீண்பேச்சு” என்ற வார்த்தைக்கு 'இசையையும் - பாடலையும்' பொருள் கொள்வதும் அவற்றை தடை செய்வதும் ஏற்கத்தக்கதல்ல. யூகங்களின் அடிப்படையில் தடைகளை அறிந்து கொள்ளும்படி இறைவன் விட்டுவிடவில்லை. அவருக்கு வார்த்தை பஞ்சம் இல்லை. எதையும் தடுப்பதானால் நேரடியாக, விளங்கும்படி கூறுபவர். இறைவன் தடுக்காதவற்றை தடுத்ததாக யூகம் செய்வது இருதயத்தில் நோயுற்றவர்களும் (ஆன்மா பல வீனமானவர்களும்) மூளையில் குழப்பமடைந்தவர்களும் கூறும் வாதமாகும்.

இறைவனுக்கு இணை சொல்லும் 'ஹதீது' புத்தகங்களும், சுன்னத் புத்தகங்களும் 'கப்சா' கதைகள், இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் நிரம்பியவை!! இவற்றைத்தான் 'வீண்பேச்சுக்கள்' நிரம்பிய புத்தகங்கள் என்று கருதி நிராகரிக்க வேண்டும்.

வாழ்வியல் சட்டங்களுக்கு குர் ஆனைத் தவிர வேறு எந்த ஹதீஸையும் பின்பற்ற வேண்டாம்! என்றும் 'குர்ஆன்' தான் மிகச் சிறந்த 'ஹதீஸ்' என்றும் இறைவன் கூறுகிறார்.

முகமது நபியின் (ஹதீஸ்) செய்திகள் என்றும் நபியால் சொல்லப்பட்ட வார்த்தைகள் என்றும் அவர்கள் நம்புவது புனைந்து சொல்லப்பட்ட பொய்ச் செய்திகளாகவே இருக்கின்றன. நபி குர் ஆனை விட்டு விலகிச் செல்ல முடியாது! குர் ஆனுக்கு எதிராகவும் கூறமுடியாது!

'ஸஹீஹான ஹதீஸ்' (பலமான செய்தி) என்று வரையறுக்கப்பட்ட 'இமாம்' 'அல்புகாரி' எழுதிய 'ஃபத்துல்-பாரி'யில் பின்வருமாறு கூறப்படுகிறது.

முகமது நபி சொன்னார், “எதிர்காலத்தில் என்னை பின்பற்றுகிற ‘உம்மத்துகளில்' சிலர் தடை செய்யப்பட்டவற்றை ஆகுமான தென்று கூறுவார்கள்.

'ஹராம்' ஆனவற்றை இவர்கள் 'ஹலால்' ஆக்க முயற்சிப்பார்கள். பட்டாடை உடுத்துவதும், மது அருந்துவதும், தடை செய்யப்படவில்லை என்பார்கள். சட்ட விரோத உடலுறவுகளையும், இசைக்கருவிகளையும் கூட ஆகுமானவை என்றே கூறுவார்கள். அவர்கள் ஒருநாள் ஒரு மலையின் அடிவாரத்தில் தங்கியிருக்கும்போது அவர்களுடைய கால்நடை-மேய்ப்பன் அவர்களை அணுகி தனது தேவைகளுக்கு வேண்டுகிறபோது மறுநாள் வரும்படி அவனை அவர்கள் விரட்டுவார்கள். ஆனால் அவர்கள் எந்த மலைச்சரிவில் தங்கியிருப்பார்களோ அந்த மலையினை நொறுங்கி விடும்படி

இறைவன் நாடுவான். அன்று இரவிலேயே அம்மலை நொறுங்கி விழுந்து அவர்களில் பலரையும் கொன்று விடும்.

எஞ்சிய சிலரையும் குரங்குகளாகவும், கொடிய மிருகங்களாகவும் இறைவன் மாற்றிவிடுவார். அவர்கள் அந்த நிலையிலேயே மறுமைநாள் வரை வைக்கப்படுவார்கள்.

இவ்வாறு மேற்படி 'ஹதீஸ்' முகமது நபி எதிர்காலம் குறித்து அறிந்துணரும் ஆற்றல் படைத்தவராயிருந்தார் என்று கூறுகிறது. எதிர்காலத்தை அறிந்தவராக இறைவன் மட்டுமே இருக்கிறார். இங்கு முகமது நபி இறைவனோடு இணை வைக்கப்படுகிறார்.

1. முதலாவதாக இறைவன் நமக்கு குர் ஆனில் போதித்துள்ளதை பார்த்தால் விசயம் விளங்கும். முகமது நபி எதிர்காலம் பற்றி ஏதும் அறியாதவராகவே இருந்தார் என்பது தெளிவுற புலப்படும். மேற்படி 'ஹதீஸ்' பொய்மையானது, இட்டுக்கட்டப்பட்டது என்பதை இதன் மூலம் அறியலாம். இத்தகைய 'ஹதீஸ்' கள் உண்மையானவை அல்ல, இவற்றை ஏற்றுக் கொள்பவர்களின் அறியாமையும் - மதியீனமுமேயாகும். இவர்கள் தங்களை 'முஸ்லீம்கள் என்று அழைத்துக் கொண்ட போதிலும் இறைவனின் வார்த்தைகளில் - குர்ஆனில் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்!

முகமது நபிக்கு எதிர்காலத்தை அறிகிற ஆற்றல் கிடையாது என்பதை இறைவன் குர் ஆனில் தெளிவுபடுத்தியுள்ளார்.

7:188

இறைவன் முகமது நபியை பின்வருமாறு கூறும்படி பணித்தார் - “எனக்கு வேண்டிய நல்லவற்றை எனக்கு நானே பெற்றுக் கொள்ள நான் சக்தியற்றவன். அதே போல எனக்கு நானே தீங்கிழைத்துக் கொள்ளவும் சக்தியற்றவன். இறைவன் எனக்கு என்ன விதித்திருக்கிறாரோ அதன்படியே ஒவ்வொன்றும் நடைபெறுகிறது. எதிர்காலத்தில் நடக்கப் போகின்றவைகளை முன்கூட்டியே நான் அறிந்தவனாக இருந்தால் என்னுடைய நல்லவைகளை நான் பெருக்கியிருப்பேன்! தீங்கு எதுவும் எனக்கு வந்திருக்காது. ஆனால் நான் நம்பிக்கையாளர்களுக்கு நன்மாராயங் கூறுபவனும், அச்சு மூட்டி எச்சரிக்கை செய்பவனுமேயன்றி வேறில்லை.

46:9 மணற் குன்றுகள்

மேற்படி வசனத்தைப் போலவே இவ்வசனத்திலும் இறைவன் முகமது நபியை பின்வருமாறு கூறும்படி பணித்தார். “ஏனைய இறைத்தூதர்களைப் போலவே நானும் இறைத்தூதன்தான்! எவ்வகையிலும் மாறுபட்டவன் அல்ல! எனக்கு என்ன நடக்குமென்றோ அல்லது உங்களுக்கு என்ன நிகழுமென்றோ நான் அறியேன்! எனக்கு என்ன சொல்லப்பட்டதோ அதை மட்டுமே பின்பற்றுகிறேன்! நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்ற ஒரு எச்சரிக்கையாளனேயன்றி வேறில்லை!” இவ்வாறு முகமது நபி நம்பிக்கையாளர்களிடம் எடுத்துரைத்தார்.

கடந்த 1400 ஆண்டுகளாக லட்சக்கணக்கான மக்கள் இசையையும் - பாடலையும் ரசித்து வந்துள்ளனர். அவர்கள் மீது எந்த ஒரு மலையோ மலைக்குன்றோ கூட சரிந்து வீழ்ந்திடவில்லை! அவர்களில் யாரும் குரங்குகளாகவோ, பன்றிகளாகவோ, காட்டு மிருகங்களாகவோ மாற்றப்படவில்லை!

இன்று 'கம்ப்யூட்டர்' யுகம். கம்ப்யூட்டர் எனப்படும் கணினி எந்திரங்களிலும் - ஓசைகளும், சுரங்களும் இசைக்கோவைகளும் அடிப்படை ஒலி கட்டுமானங்களாக பதிவில் இருக்கின்றன - அப்படியானால் கம்ப்யூட்டரை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் குரங்காகவோ பன்றியாகவோ மாறியிருக்க வேண்டும்!

காற்று தண்ணீர் போன்ற அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றித் தந்துள்ள இறைவன், இசையை அதாவது ஓசையை இப்பிரபஞ்ச நாதமாக - அடிப்படை அம்சமாக அத்தியாவசியத் தேவையாக இறைவன் அருளியுள்ளார்!

யாரோ ஒரு சிலர் புகை விட்டு சுற்றுப்புற காற்றை நாறடிக்கிறார்கள் என்பதற்காக காற்றை தடை செய்ய இயலுமா? யாரோ ஒரு சிலர் அழுக்குத் துணிகளை துவைக்கிறார் என்பதற்காக தண்ணீரை தடை செய்ய முடியுமா? அதுபோல இசையையும் - பாடலையும் சிலர் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதற்காக இசையையும் - பாடலையும் தடை செய்து விடுவது நியாயமாகுமா?

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்.....)

# அனைவரும் குற்றவாளிகளே !

(மார்ச் 199/ சப்மிட்டர்ஸ் பெர்ஸ்பெக்டிவ் இதழில் கார்ல் ஸ்கின்னர் எழுதிய கட்டுரையின் மொழியாக்கம்)

நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்?

நம்மில் பெரும்பாலோர் நாம் மிகவும் நல்லவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம்; மிகவும் நாகரிகமானவர்கள். இறைபக்தி உடையவர்கள், அடிபணிய, சரணடையக் கூடியவர்கள், இன்னும் சொல்லப் போனால் மற்றவர்களை விட நாம் சிறந்தவர்கள் என்றும் எண்ணம் கொண்டிருக்கின்றோம். நாம் பெருந்தவறுகள் எதுவும் செய்து விடவில்லை. மேலும் நாம் இனிமையானவர்கள். ஆயினும் குர்ஆன் கூறுகின்றது. 'கடவுள், அவர்களுடைய பாவங்களுக்காக உடனுக்குடன் தண்டிப்பதாக இருந்தால் பூமியில் ஒரு படைப்பைக் கூட அவர் விட்டு வைத்திருக்க மாட்டார். உதாரணத்திற்காக, இதில், இறைவன் தன் நெருங்கிய தோழர் என்று கூறிய இப்றாஹீமும் அனைத்து நன்னம்பிக்கையாளர்களும் உள்ளடங்குவர்.

எவர் இங்கே மற்றவர்களைவிட நல்லவர்? மேலும் அதனை நியாயமாக அளவிடக் கூடிய தராசுகள் இங்கே எவரிடம் இருக்கின்றன?''நான் உன்னை விட சிறந்தவன், உன்னை விடச் சிறப்பான முறையில் அடிபணிந்தவன், சரணடைந்தவன் என்று மற்றொரு சரணடைந்தவனிடம் கூறுவதற்கு உங்களுக்கு மிகவும் அசட்டுத் துணிச்சல் வேண்டும் நம்பிக்கையாளர்கள், சரணடைந்தவர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் எளிமையானவர்கள் என்று கடவுள் கூறுகிறார். எனவே வீண்பேச்சு, ரோஷம் மிகுந்த வாக்குவாதங்கள், புறம் பேசுதல் போன்றவை தவிர்க்க வேண்டும்.

உங்களை நீங்களே பரீட்சித்துக் கொள்ளுங்கள், நீங்கள் எளிமையானவர்தானா? உங்களை எவரேனும் விமர்சித்தால் நீங்கள் தடுத்துத் தற்காப்பு செய்து அதனை நியாயப்படுத்தி கொள்கிறீர்களா? நீங்களும் திருப்பி விமர்சிக்கிறீர்களா? இவ்வாறு நாம் செய்தால் நாம் எளிமையாக இருப்பவர்கள் அல்லர். உங்களிடம் திறந்த மனமிருக்கின்றதா? அடுத்தவர் என்ன கூற வருகின்றார் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்கின்றீர்களா? காது கொடுக்கின்றீர்களா? கலந்துரையாடல்களின் போது நீங்கள் சத்தியத்தை, உண்மையைத் தேடுகின்றீர்களா? வசனங்களை விவாதிக்கும்போது உங்களுக்கெதிரான விஷயங்களுக்கு நீங்கள் சாட்சி

கூறுகின்றீர்களா, அல்லது உங்கள் செயல்களை நியாயப்படுத்த அறிவு ரீதியான காரணங்களை கூறுகின்றீர்களா?

இறைவனைச் சரணடைதல் ஒரு முழுநேர வேலை ஆகும். ஒவ்வொரு நாளும் பல்வேறு சூழ்நிலைகளில் விதவிதமான முறைகளில் சோதிக்கப்படக் கூடியவர்களாக நாம் இருக்கின்றோம். நாம் தொடர்ந்து நம்முடைய குணத்தைப் பற்றிய பிரக்ஞை உடையவர்களாக, உணர்வு உடையவர்களாக இருத்தல் வேண்டும். இறைவனைச் சரணடைதலில் வார, மாத, வருட விடுமுறைகளோ, தேனீர் இடைவேளைகளோ கிடையாது.

"இந்தச் சூழ்நிலையில் நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?' என்று நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக 'நீங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்' (3:134) என்று குர் ஆன் கட்டளையிடுகின்றது. நம்முடைய குத்தகைத் தவணை (மரணம்) எப்பொழுது முடியும் என்பதை நாம் அறியமாட்டோம். எனவே உங்களால் இயன்றவரை தவறுகளுக்கு இடம் கொடுக்காதீர்கள். ஒவ்வொரு நாளும் கணக்கில் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு நாளையும் இதுவே நமது கடைசி நாளென்று கொள்ளுங்கள், அதிக நன்மைகளைச் செய்யுங்கள் 'நீங்கள் நன்மையின் பால் விரைந்து முந்திச் செல்லுங்கள் (2:148) முந்திச் செல்ல வேண்டுமெனில் அங்கே போட்டி இருக்கின்றது. வெற்றி பெற நாம் விரைவாக முந்த வேண்டும்.

இதுபோன்ற விஷயங்களில் குர்ஆன் மிகத் தெளிவாக இருக்கின்றது. ஆயினும் நாம் உறுதியான உள்ள உணர்வுகள் கொண்டிருப்பதால் தயங்குவதற்கும், தள்ளிப்போடுவதற்கும், சோம்பலாகவும், கற்றுக்கொள்ளும் ஆர்வம் இன்றி இருப்பதுவும் எளிதான நிகழ்ச்சியாகும். அல்லது நம்முடைய சகோதரன் அல்லது சகோதரியிடம் கூர்மையான வாதப்பிரதிவாதங்கள் செய்ய வேண்டும் என்றும் நமக்குத் தோன்றலாம். ஆனால் குர்ஆன் வசனங்கள் நம்மை எளிமையாக நீதமாக இருக்கும்படியும். மற்றவர்களின் வாதங்களைச் செவியேற்குமாறும் கூறுகின்றது. அவர்களுக்கும் உறுதியான உள உணர்வுகள் இருக்கக் கூடுமல்லவா? வசனம் 49:13ல் குர்ஆன் கூறுவது போல் 'கடவுளின் பார்வையில் உங்களில் மிகவும் சிறந்தவர். உங்களில் மிகவும் நல்லவரே ஆகும்!. ஆகவே நம்மால் இயன்றவரை வழிகாட்டலை மிகவும் சரியாகப் பின்பற்ற வேண்டும். உதாரணத்திற்கு, நம்முடைய சகோதரன் அல்லது சகோதரியுடன் கடுமையான வாக்குவாதங்களை செய்வதில் நமக்கு எந்தப் பலனுமில்லை.

ஆனால், நம்மில் யார் மிகவும் நல்லவர்? நம்பிக்கை கொண்ட சகோதர சகோதரிகளுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பது நமக்குத் தகுமானதல்ல. இன்னும் நாம் மற்ற ஒருவரை விடச் சிறந்தவராக இருக்கிறோம் என்று தோன்றக் கூடும். எனினும், நாளையும் இதே நிலை இருக்கும் என்று நம்மால் உத்திரவாதம் அளிக்க முடியுமா? ஓர் உதாரணத்திற்கு, நபிமார்களும் தூதர்களும் கூட தாங்கள் சுவனத்திற்குத்தான் செல்வோம் என்ற உத்தரவாதமில்லாத நிலையில்தான் உள்ளனர் என்றும் அவர்களும் தங்களைப் பற்றிய கவலைகள் கொண்டவர்களாகவே உள்ளனர் என்றும் குர் ஆன் கற்றுத்தருகிறது. (21:28) நாளை, என்ன கொண்டு வரும் என்பது நமக்குத் தெரியுமா என்ன? தத்துவத்தின் அடிப்படையில், நமக்குக் காட்டப்படும் நேர்வழியை நாம் பின்பற்றினால் நாம் வெற்றியடைவோம் என்றறிந்திருக்கிறோம். ஆனால், நாம் பின்பற்றுகின்றோமா? எவ்வளவு சரியாக? கடவுள் யாரை வழிகேட்டில் விட்டு விடுகின்றாரோ அவன் வழிகேட்டில் இருந்தாலும் தான் நேரான வழியில் நிலைத்திருப்பதாக சந்தேகமற்ற எண்ணம் கொள்ளும்படி அவர் விட்டு விடுகிறார். அது நீங்களாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, 12:106 கூறுவது போல் 'இணைவைக்கும் நிலையில் அல்லாமல் மக்களில் பெரும்பாலோர் கடவுள் மீது நம்பிக்கை கொள்வதில்லை. ஆயினும் இணைவைப்பவர்கள் தீர்ப்பு நாளில் ஆணையிட்டுக் கூறுவார்கள், 'இறைவன் மீது ஆணையாக, எங்கள் இரட்சகரே நாங்கள் ஒரு போதும் இணைவைத்ததில்லை (ஆயினும் அவர்கள் கடவுளை மற்றவர்களுடன் இணைவைத்தே வணங்கி, வழிபட்டு வந்தனர்.)

(6:23)

சரணடைந்த ஒருவராக இருப்பதில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

1. தனி மனிதன் என்ற நிலை

2. சமூகத்தின் ஒரு அங்கத்தினர் என்ற நிலை

1. ஒரு தனி மனிதன் என்ற நிலையில் - அனைவரும் அவனுக்காக என்ற கருத்தோட்டம், உதாரணமாக தீர்ப்புநாளின் போது பாலூட்டும் ஒரு தாய் தன் மகவை கூட பொருட்படுத்தமாட்டாள் என்பதை நினைத்துப் பாருங்கள். தன்னுடைய மீட்சிக்காக மனைவி, மக்கள். பெற்றோர் அனைவரையும் ஈடாகத் தர முனையக் கூடிய அந்நாளை எண்ணிப்பாருங்கள். 'அனைவரும் அவனுக்காக' என்றால் என்ன அர்த்தம்? நாம் நமக்காக நம்முடைய சகோதர சகோதரிகளைப் புறக்கணித்து விடலாம் என்பது அதன் அர்த்தம் அல்ல. சரணடைந்த ஒருவன் 'நன்மையின் பால் விரைந்து

முந்திச் செல்வான்'. இந்தப் பந்தயத்தில் அனைவரும் அவனுக்காவே தன்னுடைய ஆன்மாவை முற்படுத்திக் கொள்ள நம் சகோதர சகோதரிகள் செய்யும் செயல்கள் அவர்களுக்குரியவை. உங்களில் மிகவும் நல்லவரே உங்களில் சிறந்தவர். எனவே நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அது நல்லதுதானா? என்ற கண்ணோட்டத்திலேயே அணுகப்பட வேண்டும். நம் சகோதர சகோதரிகளின் ஆன்ம வளர்ச்சிக்கு முன்னேற்றத்திற்கு நாம் உதவுவதும் நன்மையானதே. அதாவது, உனக்கும் ஜெயம், எனக்கும் ஜெயம் என்ற நிலை.

2. சமூகத்தின் ஒரு அங்கத்தினர் என்ற நிலையில் ஒரு கட்டடச் சுவரின் செங்கற்களைப் போல் நீங்கள் ஒற்றுமையாக இருங்கள். (61:4 30 அல்லது 40 பேரை அல்ல, 3 அல்லது 4 பேரைக் கூட ஒரு விஷயத்தில் ஒத்த கருத்துக்குக் கொண்டு வருவது ஒரு கடினமான காரியமாகமே உள்ளது. சமூகத்தைப் பாதிக்கக் கூடிய செயல்களில் தானாகவே முன் நிற்கும் ஒருவன் தன்னுடைய நடவடிக்கைகளுக்கு உரிய விளக்கத்வை சமூகத்திற்குக் கூறக் கடமைப்பட்டவன் ஆவான். இங்கே சமூகத்தை சீரழிக்கக் கூடிய அளவுக்கோ அல்லது அதனை முற்றிலும் பொருட்படுத்தா அளவுக்கோ 'அனை வரும் அவனுக்காக' என்ற நிலை இல்லை அவ்வாறெனில் இங்கே பிளவு ஏற்படுகின்றது.

நம்மை வழிகெடுப்பதாகச் சாத்தான் சபதமெடுத்துள்ளான், நம்மை பலியாக்குவதற்காகப் பல கோணங்களிலும் அவன் முனைவான். நம்முடை பலஹீனங்களை அவன் அறிந்திருக்கின்றான். அவன் அனுபவ மிக்கவனாகவும், புத்திக் கூர்மை உடையவனாகவும் இருக்கின்றான் நம்மைவிடச் சக்தி பெற்றவனாகவும் இருக்கின்றான். அவனால் நம்பை பார்க்கவும், கேட்கவும் முடியும். ஆனால் நம்மால் அவனைப் பார்க்கவ கேட்கவும் முடியாது. அனைத்திற்கும் மேலாக, மனிதன் பலஹீனனா இருக்கின்றான். பிரச்சினைகளை எதிர்பாருங்கள், வித்தியாசங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்!

இனிமேல் நம் வாழ்நாள் உள்ளவரை தவறே செய்ய மாட்டோம் என்றே சமூகத்திற்கு ஏதேனும் பிரச்சினைகளை உண்டாக்க மாட்டோம் என்றே நம்மால் உத்திரவாதமளிக்க முடியுமா? எவரேனும் தவறு செய்தால் நீங்க

எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதில் எச்சரிக்கையாக இருங்கள். அடுத்துத் தவறு செய்பவர் நீங்களாகவும் இருக்கலாம். நாம் இயைந்து செல்வதற்குரிய செயல்பாட்டு வழிமுறையை வசனம் 29:45ல் கடவுள் நமக்குத் தருகிறார். மேலும் பொறுமையை கொண்டு தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். ஒருவருக்கொருவர் எளிமையாக இருக்க வேண்டும். நல்லதைக் கொண்டு தீயதை எதிர்கொள்ள வேண்டும். வாழ்வு மிகச் சுமூகமாகும்.

(....6 பக்க தொடர்ச்சி )

### 3. 7:32 சோதனைக்காலம் PURGATORY

"கேளுங்கள்" நபியே! இறைவன் தனது படைப்பினங்களுக்காக அளித்துள்ள அருள் கொடைகளையும், நல்லவற்றையும், தடை செய்வது யார்?" என்று இறைவன் மேலும் கூறுகிறார். "அருட்கொடைகளையும் நல்லவற்றையும் இவ்வுலக வாழ்வில் நம்பிக்கையாளர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காகவே இறைவன் அருளியுள்ளார். இவ்விதமான நமது வேத வெளிப்பாடுகளை அறிவு படைத்தோருக்கு நாம் விளங்கச் செய்கிறோம்.

4. சிலர் தங்களை 'முஸ்லிம்' என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இறைவனின் வாழ்வியல் வழிகாட்டும் வேதமான திருக்குர் ஆனில் கூறப்பட்டுள்ள சட்டதிட்டங்களை ஏற்க மறுக்கிறார்கள்!

இறைவன் அருளிய குர்ஆனுக்கு பதில் மனிதர்கள் எழுதியுள்ள புத்தகங்களில் காணப்படும் சட்டங்களை, பின்பற்ற விரும்புகிறார்கள். இந்த சட்டங்கள் குர்ஆனுடைய அடிப்படைகளுக்கு எதிராகவும் முரண்பாடாகவும் இருந்தாலும் கூட அவற்றையே பின்பற்ற விரும்புகிறார்கள். இவர்கள் இறைவனுக்கு இணைவைப்பவர்கள் என்று குர்ஆன் கூறுகிறது!

யூதர்கள், கிறிஸ்தவர்கள் போலவே முகம்மதியர்களும் தங்கள் மத தருமார்கள் - தலைவர்கள் விதித்துள்ள சட்டங்களைப் பின்பற்றவே விரும்புகிறார்கள்! இறை வசனம் 9:31 இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் 'முஸ்லீம்கள்' அல்ல 'முஹம்மதியர்களே'!!

மறுமை நாளில் பெரும்பான்மையான இவர்களை சுட்டிக்காட்டி "இவர்கள் தர் ஆனை கைதவற விட்டுவிட்டார்கள்" இவ்வாறு இறை வசனம் 25:30 சட்ட சாஸனம் கூறுகிறது.

# நிச்சயிக்கப்பட்ட வெற்றி

முஸ்லிம்களுக்கு (கடவுளைச் சரணடைந்தோர்க்கு) வெற்றி என்பது நிச்சயிக்கப்பட்ட உத்திரவாதமான ஒன்று என்று இருகருத்துக்கு இடமின்றி குர்ஆன் கற்றுத் தருகிறது.

“நம்பிக்கையாளர்கள் நிச்சயம் வெற்றி அடைவார்கள் என்று நாம் விதித்திருக்கின்றோம்”

وَكَانَ حَقًّا عَلَيْنَا نَصْرُ الْمُؤْمِنِيْنَ (30 : 47)

"இவ்வுலகிலும், உயிர்த்தெழும் நாளின் போதும் நம்முடைய தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டோருக்கும் நிச்சயமாக நாம் வெற்றியை வழங்குவோம்."

اِنَّا لَنَنْصُرُ رُسُلَنَا وَالَّذِيْنَ اٰمَنُوْا فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَيَوْمَ يَقُوْمُ الْاَشْهَادُ (40 : 51)

“தனக்கு ஆதரவு தருபவர்களுக்குக் கடவுள் வெற்றியைத் தந்து ஆதரவளிப்பார். கடவுள் சக்தி மிக்கவர், அனைத்தையும் மிகைத்தவர்"

وَلَيَنْصُرَنَّ اللّٰهُ مَنْ يَّنْصُرُهٗ اِنَّ اللّٰهَ لَقَوِىٌّ عَزِيْزٌ (22 : 40)

"நம்பிக்கை கொண்டவர்களை நிச்சயம் இறைவன் பாதுகாப்பார். எந்த ஒரு நம்பிக்கைத் துரோகியையும், நிராகரிப்பவனையும், கடவுள் நேசிப்பதில்லை "

اِنَّ اللّٰهَ يُدٰفِعُ عَنِ الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ كُلَّ خَوَّانٍ كَفُوْرٍ (22 : 38)

நம்பிக்கை கொண்டவர்களே நீங்கள் கடவுளுக்கு ஆதரவளித்தால் அவர் உங்களுக்கு வெற்றியைத் தருவார். உங்கள் நிலைகளை உறுதிபடுத்துவார்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَنْصُرُوا اللّٰهَ يَنْصُرْكُمْ وَيُثَبِّتْ اَقْدَامَكُمْ (47 : 7)

“பின் ஏன் உலகெங்கிலுமுள்ள 'முஸ்லிம்கள்' தோற்கடிக்கப்படுகின்றனர்?”

"மேலே கூறப்பட்ட உத்திரவாதமான வாக்குறுதிகளின் அடிப்படையில் இன்றைய முஸ்லிம்கள் உண்மையான 'முஸ்லிம்கள்' அல்லர் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஏனெனில் கடவுள் ஒரு போதும் தன் வாக்குறுதிகளுக்கு மாறு செய்வதில்லை"

## சரித்திர உண்மைகள்

முஸ்லிம் சமுதாயம் குர் ஆனை மட்டும், - அதல்லாத வேறெதையும் அல்ல - ஏற்றுக் கொண்டு, ஆதரித்து, பின்பற்றி வந்த வரையில், முஸ்லிம்கள் உலகை

விஞ்ஞான, தொழில் நுட்ப ரீதியாகவும், கலாச்சார, சமூக, ராணுவ, பொருளாதார ரீதியிலும் வழிநடத்தி முன் நின்றனர். எந்த ஒரு போரிலும் அவர்கள் தோற்றதில்லை. இஸ்லாம் (சரணடைதல்) என்ற மார்க்கத்தின் எல்லைகள் மேற்கு ஆப்பிரிக்கா முதல் சீனா வரையிலும், தெற்கு பிரான்ஸ் முதல் கிழக்கு ஜெர்மனி வரையிலும் விரிந்தது.

ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஹதீஸ் மற்றும் சுன்னா ஆகியவை உருவாக்கப்பட்டது முதல் முஸ்லிம் சமுதாயம் தொடர்ந்து சீரழியத் துவங்கியது. குர் ஆனுடன் அனாசாரமான இக்கண்டுபிடிப்புகள் மார்க்க ஆதாரமாக ஏற்றுச் செயல்பட துவங்கியதிலிருந்து இன்று வரை அவர்கள் ஒரு போரைக் கூட வெல்ல முடியவில்லை.

30 லட்சம் இஸ்ரேலிய யூதர்கள் பதினைந்து கோடி அரபியர்களைத் தொடர்ந்து தோற்கடிக்க முடிவது எப்படி?

முப்பது லட்சம் இஸ்ரேலிய யூதர்கள் 100 கோடி முஸ்லிம்களை அவர்களுடைய புனிதப்பள்ளியை விட்டும் தடுக்கின்றனர் என்பது அறிவுக்குப் பொருந்துகின்றதா?

இந்தியா தொடர்ந்து பாகிஸ்தானை தோற்கடிக்க முடிவது எப்படி? இன்னும் பற்பல முஸ்லிம் நாடுகள் போர்களில் தோல்வியடைவது ஏன்? உண்மையில் இவர்கள் கடவுளுக்கு மிகவும் பிரியமான முஸ்லிம்கள் என்றால் இவர்கள் இவ்வாறு தொடர்ந்து தோற்றுக் கொண்டிருப்பது ஏன்? எப்படி?

ஏன் முஸ்லிம்கள் தோற்கடிக்கப்படுகின்றனர்?

இதன் காரணமாவது. அவர்கள் கடவுளின் வார்த்தைகளை நம்ப மறுக்கின்றனர். குர் ஆன் தெளிவானது. விவரிக்கப்பட்டது, முழுமையானது, இலகுவானது, மேலும் அது மட்டுமே மார்க்க ஆதாரமாகக் கொள்ளத்தக்கது என்று மீண்டும் மீண்டும் இறைவன் அளிக்கும் வாக்குறுதிகளை நம்ப மறுக்கின்றனர்.

ஏனெனில், அவர்கள் குர் ஆனுடன் மற்றவற்றையும் (ஹதீஸ், இஜ்மாவு, கியாஸ்) மார்க்க ஆதாரமாக ஏற்று கொண்டனர்.

எவர் ஒருவரும் நம்முடைய செய்திகளைப் புறக்கணித்தால் அவருக்குத் துன்பம் மிகுந்த வாழ்க்கையே இருக்கும். பின்னர், உயிர்த்தெழும் நாளில் அவரைக் குருடராக நாம் எழுப்புவோம். அவர் கேட்பார், “என் இரட்சகரே நான் (உலக வாழ்வில்) பார்வை உடையவனாக இருந்தேனே, ஏன் என்னைக் குருடனாக எழுப்பினீர்? இது ஏனெனில் நம்முடைய வேதங்கள் உன்னிடம் வந்தன. ஆனால் அவற்றை நீ மறந்து விட்டாய். அதன் விளைவாக நாம் இன்று உன்னை மறந்து விட்டோம்.

மேலும் வரம்பு மீறியவர்களாக அவர்களுடைய இரட்சகரின் வசனங்களை நம்ப மறுப்பவர்களை இவ்விதமாகவே நாம் தண்டிப்போம். நிச்சயமாக மறுமையின் தண்டனை மிகவும் மோசமானதாகவும் நிரந்தரமானதாகவும் உள்ளது.

(20:124-127)

# உலக முடிவுநாளைப் பற்றி ஓர் ஆய்வு

ஆக்கம். முகம்மது கஸ்ஸாலி

குர்ஆன் முழுமையானது; தெளிவானது. பார்க்க :- 6 : 114, 115.

முழுமையானது என்றால் ஆரம்பம், முடிவு என்ற இந்த இரண்டும் ஒன்று சேர இருப்பது அவசியம். இறைவன் ஆரம்பத்தில் ஆதம் என்ற மனிதனையும் ஆதமிற்கு துணையாக ஏவாளையும் படைத்து, சொர்க்கத்திலுள்ள எல்லா கனிவகைகளையும் உண்டு வாழலாம் என்றும்; ஆனால் ஒரேயொரு மரத்தை குறிப்பிட்டு அதன் அருகில் கூட நெருங்க வேண்டாம் என்று கட்டளையிட்டு மனிதகுலத்தின் ஆரம்பத்தை சொர்க்கத்தில் தொடங்கினார் என்று பைபிள் கூறுகின்றது.

இறைவனின் கட்டளைப்படி நெருங்கக்கூடாத மரத்தை, ஷைத்தானின் தூண்டுதலினால் ஆதம் தன் மனைவியுடன் சேர்ந்து அதன் கனியை சுவைத்து தம் கரங்களினால் பாவத்தை தேடிக்கொண்டார். மனம் திருந்திய ஆதமும், ஏவாளும் இறைவனிடம் பாவ மன்னிப்பு தேடினர். . இறைவன் அந்த இருவரையும் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றினார். இவ்வாறாக மனிதகுலம் பூமியில் ஆரம்பிக்கின்றது.

உலக மனிதர்களை பாவிகளே என்று கிறிஸ்துவர்கள் அழைக்க; உலக சமய சார்பற்ற தத்துவ ஞானிகள் சந்தேகங்களை வினாக்களாக்குகின்றனர்!!

அதாவது, பாவம் செய்தவர்கள் ஆதாம், ஏவாள் என்ற ஆரம்பகால இருவரேயன்றி; இன்று வாழும் இலட்சோபலட்சம் மனிதர்கள் அல்லர். பிறகு எந்த நியாய விளக்கத்தின் அடிப்படையில் இந்த மனித குலத்தை பாவிகளே என்று அழைக்கிறீர்கள்? இந்த கேள்விக்கு பைபிள் கூறும் விளக்கமென்ன?

இறைவனின் இறுதிவேதமான திருகுர் ஆன் இந்த கேள்விக்கு ஆழமான தன் பதிலை அசைக்க முடியாத விஞ்ஞான பூர்வமான பல உண்மைகளுடன் மனித குலத்திற்கு விளக்கமளிக்கிறது.

குர்ஆன் 38:69 வசனம் "மேலான கூட்டத்தார் தர்க்கித்து கொண்டது பற்றி எனக்கொன்றும் தெரியாது என்று கூறுகின்றது. இந்த தர்க்கமானது... மனிதகுலம் ஏன் தோன்றவேண்டும்; இறைவனால் மனிதர்கள் ஏன் பூமியில் படைக்கப்பட வேண்டும் என்று பதில் கூறும் முகமாக, மிக ரத்தினச்

சுருக்கமாக... முகமது நபி தனக்கு தர்க்கத்தின் முழுவிபரம் தெரியாது என்று கூறும் விதமாக அமைந்துள்ளது. ஆனால் குர்ஆனை விளக்குவது தன் கடமையாக இறைவன் கொண்டுள்ளபடியால் ரஷாத் கலீஃபா என்ற மனிதரை இறைவன் தன் அருளினால் தன்னுடைய தூதுவராக தேர்ந்தெடுத்து இந்த 38-வது அத்தியாயத்தின் 69-வது வசனத்தை மனிதகுலம் தோன்றுவதற்கு முன்னால் 'Before Genesis' என்ற தலைப்பில், இன்றுவரையில் - எந்துயர்வான தத்துவ ஞானிகளோ, சிந்தாந்தவாதிகளோ, ஆன்மீக பெரியோர்களோ, விஞ்ஞானிகள் கூட கூறாத; மனித குலத்திற்கே புலப்படாத; அறிவிற்கு எட்டாத மிகப் பெரிய உண்மையை விளக்கி கூறி உலக மக்கள் அனைவரும் "பாவிகள்" தான் - அதற்கு பிராயச்சித்தமாக இந்த பூமியில் மனிதர்கள் வாழ்க்கை என்ற சோதனை ஏற்று மரணம் என்று முடிவுக்குப்பின் உலகமுடிவு என்ற கியாமத்திற்குப் பின் நியாயத் தீர்ப்பின் அடிப்படையில் வெற்றி பெற்று சுவனம் புகும் முடிவுடன் மனித குலத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை தெளிவாக காலத்தில் விளக்கிய இறைவன், (பார்க்க ஜூலை 2000 இதழ்) குர்ஆன் 3:81 மற்றும் 33:7-ல் குறிப்பிடப்பட்டுள்ள தன் தூதுவரின் வருகைக்கான தெளிவான அத்தாட்சிகள் பலவும் ஈந்து - குறிப்பாக கணித கட்டமைப்பு எண் '19' மனித குலம் தோன்றுவதற்கு முன்னால், உலக முடிவுறும் நாள் என்பன ரஷாத் கலீஃபா வை தூதுவராக பறைசாற்றியதோடு; குர்ஆனில் சேர்க்கப்பட்டிருந்த கழிவுகளையும் (9:128,129) நீக்கி சுத்தம் செய்து குர் ஆனையும் முழுமை பெறச்செய்தார்.

குர்ஆன் 72:25 வசனம் (நபியே!) நீர் கூறும் : "உங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருப்பது (அவ்வேதனை) சமீபமா, அல்லது என்னுடைய இறைவன் அதற்குத் தவணை ஏற்படுத்தி இருக்கிறாரா என்பதை நான் அறியேன், தொடர்ந்து வரும் வசனங்களில் (அவர்தான்) மறைவானவற்றை அறிந்தவர். எனவே, தான் மறைத்திருப்பவற்றை அவர் எவருக்கும் வெளியாக்கமாட்டார். தொடர்ந்து 27-வது வசனத்தில் "தான் பொருந்திக் கொண்ட தூதருக்குத் தவிர" எனவே அவருக்கு முன்னும், அவருக்கு பின்னும் உள்ள குறிப்பான செய்திகளை வெளிப்படுத்தவே நாம் அவரை தேர்ந்தெடுத்தோம் என்று கூறுகின்றது.

மேலும் குர் ஆனில் 15:87 வசனமானது "நாம் உங்களுக்கு ஏழு இரட்டைகளையும் மற்றும் மகத்துவமிக்க குர் ஆனையும் கொடுத்துள்ளோம்" என்று கூறுகின்றது. இறைவன் மனித குலத்திற்கு குர் ஆனை தவிர மற்றொன்றையும் கொடுத்துள்ளார். அந்த மற்றொன்று என்னவென்பதை

காலத்தால் விளங்கவேண்டிய நாம் - "மனிதன் மிகவும் அவசரக்காரனாக இருக்கின்றான் என்ற குர்ஆனின் வசனத்திற்கேற்ப... மிகமிக அவசரப்பட்டு அந்த வசனத்திற்கு தவறானதோர் விளக்கத்தை இந்த மனித சமுதாயம் கொண்டதினால்... ஒவ்வொரு செய்திக்கும் ஒரு காலகட்டம் உண்டு (6:67) என்ற நியதியின் அடிப்படையில் இறைவன் தன் அருளினால், ரஷாத் கலீபா என்ற தூதுவரின் மூலமாக 15-வது அத்தியாயத்தின் 87-வது வசனத்தை விளக்குகின்றார்.

குர் ஆனின் முத்திரை எழுத்துக்களான அலீஃப், லாம், மீம், ரா, ஸாத், யா, சீன், காஃப் போன்றவை குர் ஆனை எவ்வாறு பாதுகாக்கின்றது என்பதை நாம் அறிந்து உள்ளோம். அதே போன்று மொத்தம் 29 அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ள இந்த முத்திரை எழுத்துக்களில் ... ஏழு இரட்டைகள் என்னும் பதினான்கு அணிகள் (Sets). இந்த மகத்தான குர்ஆன் மனித குலத்திற்கு எத்தனை ஆண்டுகாலம் வழிகாட்டும் என்பதையும் நிர்ணயிக்கிறது. எனும் இந்த அரிய விளக்கத்தை இறைவன் தன் அருளினால் ரஷாத் கலீஃபா மூலமாக நமக்கு விளக்குகின்றார்.

குர் ஆனின் முத்திரை எழுத்துக்கள் இடம் பெற்றுள்ள 29 அத்தியாயங்களின் 14-அணிகளில் உள்ள முத்திரை எழுத்துக்களின் மொத்த எண் மதிப்பு 1709. குர் ஆன் இந்த அரிய கணித விளக்கத்தின்படி 1709 ஆண்டுகாலம் மனித குலத்திற்கு வழிகாட்டும். 1710-வது ஆண்டில் உலகம் இருக்காது. இந்த மனித குலம் இருக்காது., அதாவது இந்த பூமியின் முடிவுநாள் "End of the World" - ஹிஜ்ரி 1710-வது ஆண்டு நிகழும் என்று கூறுகின்றது. ஹிஜ்ரி 1710-வது ஆண்டின் இணையான ஆங்கில ஆண்டு கி.பி. 2280 என்பதையும் இறைவனின் அருளினால் நாம் (காண்க மகிழ்ச்சியுடன் செப்டம்பர் 2000 இதழ்) அறிந்துள்ளோம்.

இறைவன் தன் திருமறையில் 20:15 வசனத்தில் உலகமுடிவு நாளை, தான் ஏறக்குறைய மறைத்து வைக்க நாடியிருப்பதாகவே கூறுகின்றார்; தான் மறைத்து வைத்திருப்பதாக கூறவில்லை. மாறாக குர்ஆனின் மற்றொரு வசனம் 33:63 விளக்குவது என்ன வென்றால் உலக முடிவு நாளைப் பற்றிய எல்லாவற்றையும் நீங்கள் தெரிந்து கொள்ளும்பொழுது மிக சமீபத்தில் அந்த நேரம் வந்துவிடலாம்.

குர் ஆனின் ஒருவசனம் மற்றொரு வசனத்திற்கு விளக்கமளிக்கும் என்ற அடிப்படையில் நாம் குர் ஆனை இறைவனின் துணைக்கொண்டு ஆராய்ந்தோமானால் நிச்சயம் குர் ஆனை இறைவன் நமக்கு விளக்குகின்றார். அடுத்த அத்தியாயம் 34:30- வசனத்தில் “கூறுவீராக குறிப்பிட்ட நாளில்,

குறிப்பிட்ட நேரம் உங்களுக்காக காத்திருக்கிறது. அந்த குறிப்பிட்ட நேரம் ஒருமணிநேரம் முந்தவும் செய்யாது, பிந்தவும் செய்யாது. குர்ஆனில் இறைவன் II:104, 34:30. 38:81 இந்த மூன்று வசனங்களில் உலக முடிவு நாளை குறிப்பிட்ட நாள் என்றே கூறுகின்றார்.

மனிதர்களின் கூற்றுப்படி குறிப்பிட்ட அந்த நாளை நாம் அறிய முடியாதென்றால்... உலக முடிவு நாள் நிகழும் பொழுது அது திடீரென நம்மை தாக்கியதாகவே நாம் நினைப்போம். திடீரென நிகழும் நிகழ்ச்சியை உலகத்தில் எந்த மனிதர்களும் குறிப்பிட்ட நேரத்தில் நடந்த நிகழ்ச்சியாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

இறைவனின் இறுதி வேதமான திருக்குர் ஆன் 6:31, 44, 47; 7:95, 187; 12:107; 21:40. 22:55; 26:202; 29:53; 39:55; 43:66; 47:18 ஆகிய வசனங்களில் இறை நிராகரிப்பாளர்களுக்கு உலக முடிவுநாளை; திடுக்கிடும் வேளை திடீரென நிகழும் நிகழ்ச்சியாகவே கூறுகின்றது.

மாறாக, இறை நம்பிக்கையாளர்களுக்கு உலக முடிவு நாள் திடீரென நிகழும் நிகழ்ச்சியாக இராது. இந்த வசனங்களின் அடிப்படையில் உண்மை முஸ்லிம்கள் உலக முடிவு நாளை அறிந்து அந்த வேளையை எதிர்பார்த்திருப்பார்கள்.

அதேசமயம் இன்றைய இஸ்லாமிய சமுதாயம் உலக முடிவு நாளுக்கு முன்பாக பத்து பெரிய அடையாளங்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஒன்று புகைமூட்டம், இரண்டு தஜ்ஜாலின் வருகை, மூன்று ஈஸா நபியின் வருகை, நான்காவது பேசும் அதிசய மிருகம். ஐந்தாவது சூரியன் மேற்கில் உதயம், ஆறாவது யஃஜூஜ் - மஃஜூஜ்.. ஏழாவது கிழக்கில் பூகம்பம். எட்டாவது மேற்கில் பூகம்பம். ஒன்பதாவது மத்தியில் பூகம்பம், பத்தாவது எமன் தேசத்திலிருந்து புறப்படும் நெருப்பு. இந்த அடையாளங்களில் குறிப்பாக நாம் ஐந்தாவது அடையாளமான சூரியன் மேற்கில் உதயம் என்பதைனை சற்று விஞ்ஞானத்தின் அடிப்படையில் ஆராய்வோம்

சமீபத்தில் இந்தியாவில் நடந்த “குஜராத் பூகம்பம்” 6.9 ரிக்டர் அளவு என கணக்கிடப்பட்டுள்ளது. பூகம்பத்திற்கு காரணம்; வட கிழக்காக இமயமலை நகர்ந்ததும், பூமியின் கீழ் மணற்பாறைகளைக் கொண்ட அடுக்குகள் நகர்ந்ததுமேயாகும் என்று விஞ்ஞானிகள் கருத்து கூறுகின்றனர். இந்த நிகழ்வு பூமிக்குள் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு என்பது திண்ணம். அதாவது பூமி தன்னுடைய பாதையை விட்டு விலகவுமில்லை, வேகத்தை

அதிகரிக்கவும் இல்லை. எதிர் திசையில் சுழலமில்லை. எப்பொழுதும் போலவே தன் பயணத்தில் நிலைத்திருக்கின்றது. இதற்கே குஜராத்தில் மனித சமுதாயம் மிகப்பெரிய இழப்பை பூகம்பம் என்ற பெயரில் சந்தித்திருக்கின்றது என்றால் பூமி தன்னுடைய வேகத்தை திடீரென நிறுத்தினால் என்ன நிகழும் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

மனித குலத்தின் அரிய கண்டுபிடிப்பு ராக்கெட். கி.பி. 1957ஆம் ஆண்டில் ராக்கெட்டுகளின் வேகம் மணிக்கு 3,960 கி.மீ. ஆகும். நவீன ராக்கெட்டுகளின் வேகம்........... பூமியின் சுழற்சி வேகம் மணிக்கு சுமார் 1670 கி.மீ. ஆகும் இவ்வளவு வேகத்தில் சுழலும் பூமியானது. திடீரென தன் பயணத்தை நிறுத்தி, எதிர்திசையில் சுழன்றால்தான் சூரியன் மேற்கே உதயமாகும். பூமியில் மணிக்கு 150 கி.மீ. வேகத்தில் செல்லும் பேருந்து திடீரென நின்றால் மிகப்பெரிய விபத்து நிகழும் என்பதை நாம் அறிந்துள்ளோம். மணிக்கு சுமார் 1670 கி.மீ. வேகத்தில் சுழலும் பூமி திடீரென நின்றால் பூமி நிலைத்திருக்காது. அன்றே பூமி அழிந்து விடும். இது விஞ்ஞான உண்மையாகும். உண்மை இவ்வாறிருக்க... ஆறாவது அடையாளமான யஃஜூஜ் மற்றும் மஃஜூஜ் எப்பொழுது தோன்றுவார்கள். மேலும் மீதமுள்ள 7,8,9,10 வது அடையாளங்கள் எப்பொழுது தோன்றும். இன்றைய முஸ்லீம் சமுதாயம் ஹதீஸ்களின் அடிப்படையில் இந்த அடையாளங்களுக்காக காத்திருக்கும் பொழுது பூமியின் முடிவுநாள் அவர்களுக்கு திடுக்கிடும் நிகழ்ச்சியாகவே இருக்கும்... ஆனால்

இறைவனின் வேதத்தை மட்டுமே பின்பற்றும் நம்பிக்கை கொண்டோருக்கோ - யஃஜூஜ் - மஃஜூஜ் தோன்றும் காலமும், உலக முடிவுநாளும் தெரிந்துள்ள படியால் அந்த நிகழ்ச்சி திடுக்கத்தை தராது. இனி இறைவனின் துணை கொண்டு குர்ஆனின் வசனங்கள் கூறும் உலக முடிவுநாளையும், நேரத்தையும் கணக்கிடுவோம்.

1. குர் ஆன் 15:87 வசனம் இறுதிநாள் நிகழும் ஆண்டை நமக்கு அறிவிக்கின்றது.

2. குர்ஆன் 20:15 வசனம் இறைவன் அந்த நேரத்தை.... தான் முழுமையாக மறைத்து வைத்திருப்பதாக கூறவில்லை.

3. குர் ஆன் 33:63 வசனம் உலகமுடிவுறும் நேரத்தை நீங்கள் அறிந்து கொள்ளும் பொழுது, அது மிகவும் சமீபத்தில் வந்து விடலாம் என்று கூறுகின்றது.

4. குர்ஆன் 34:30 வசனம் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரம் உங்களுக்காக காத்திருக்கிறது. மேலும் அந்த நேரம் ஒரு மணிநேரம்

கூட முந்தவும், பிந்தவும் செய்யாது என்று அந்த இறுதி நேரத்தை உறுதியான நேரமாக குறிப்பிடுகின்றது.

அத்தியாயம் 75 - அல் கியாமத் : வசனம் 5 ... விளக்குவது மனிதர்களின் குணமாவது; தன் முன்னால் நிகழும் நிகழ்ச்சிகளை மட்டுமே நம்புவார்கள் என்கின்றது. 75:6 வசனம் (ஏன் என்றால்) அவர்கள் உலக முடிவுநாளை சந்தேகிக்கின்றார்கள். முற்போக்கு சிந்தனையாளர்கள் உலகம் அழியாது என்று கூறுகின்றனர். முஸ்லீம்களோ உலகம் ஒரு நாள் நிச்சயம் அழியும். ஆனால்! என்று தங்களுடைய பல சந்தேகங்களை (ஹதீஸ்களின் அடிப்படையில்) வினாக்களாகவும், விளக்கங்களாகவும் கொண்டு.... 75:6-வது வசனத்தின்படி உலக முடிவுநாளைப் பற்றி பல சந்தேகங்கள் கொண்டுள்ளனர்.

குர்ஆன் 75:9 வசனம் சூரியனையும், சந்திரனையும் நாம் ஒன்றொடொன்று மோத விடுவோம் என்கின்றது. சூரியனையும் சந்திரனையும் மோதவிடுவதால் அழிவு நேரிடுமா? என்ற வினா இங்கு எழுகிறதல்லவா? அதற்கு 75:8 வசனம் சந்திர கிரகணம் ஏற்படும்பொழுது என்று கூறுவதின் மூலம் முடிவுறும் நாளன்று சந்திர கிரகணம் ஏற்படும் என்று கூறுகின்றது. சந்திர கிரகணம் ஏன் ஏற்பட வேண்டும்? ஏனென்றால் -- சந்திர கிரகணத்தின் பொழுதுதான் சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் பூமி வரும். பூமி நடுவில் இருப்பதினால் சூரியனையும், சந்திரனையும் ஒன்றோடொன்று மோத விடும் பொழுது பூமி நடுவில் சிக்கி பேரழிவுக்குள்ளாகும். மேலும் 75:8வது வசனம் குறிப்பிட்ட நேரத்தை நமக்கு விளக்குகின்றது. "காட்சி மிக நேராக இருக்கும்". அதாவது சந்திர கிரகணத்தின் பொழுது சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் அமையும். அந்த காட்சியானது எப்பொழுதும் துல்லியமான நேர்கோட்டில் அமையாது. 19 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சூரியன், பூமி, சந்திரன் இந்த மூன்றும் ஒரே நேர்கோட்டில் மிக துல்லியமாக அமையும்.

குர்ஆன் 15:87 வது வசனத்தின்படி ஜமாத்துல் அவ்வல் 14-ஆம் பிறை: அதாவது டிசம்பர் 7-ம் தேதி சந்திரகிரகணம் ஏற்படும். 75:7வது வசனத்தின்படி சரியான 100% சந்திரகிரகணம் அதிகாலை 3:22-க்கு GMT ( உலகப்பொது நேரம்) ஏற்படும். நூறு சதவீதம் சந்திரகிரகணம் மீது துல்லியமாக 3:22க்கு ஏற்பட்ட பிறகு மறுவினாக்களுக்கிடமில்லாமல் சரியாக (வசனம் 75:9) 3:23 நிமிடத்தில் பலகோடி நிறையுடைய சூரியனும் சந்திரனும் பலகோடி கி.மீ. தூரத்திலிருந்து மிகமிக வேகமாக மோதும்பொழுது இடையில் இடம்பெற்றிருக்கும் பூமி அழிவது மிகமிக சத்தியம். 75:11-வது வசனத்தின்படி தப்பிக்க எந்த வழியும் இல்லை .

ஹிஜ்ரி 1710- (கி.பி. 2280) 19ஆல் வகுபடக்கூடிய ஆண்டு , டிசம்பர் 7-ஆம் தேதியானது 19 ஆல் வகுபடக்கூடிய நாளாகும் - 7+12 = 19

குறிப்பிட்ட அந்தநாளில் பூமியானது இறுதிநேரமான அந்த குறிப்பிட்ட நேரம் - 19 ஆல் வகுபடக்கூடிய 3:23 ஆகும்.

ஹிஜ்ரி ஆண்டு 1710 - மாதம் 5 - பிறை 14

ஆங்கில ஆண்டு 2280 - மாதம் 12 - தேதி 7 நேரம் 3:23

குர்ஆன் 72:28 வசனம் : "தங்களுடைய இறைவனின் தூது செய்திகளை, திட்டமாக எடுத்து சொல்லிவிட்டார்களா? என்று அறிவதற்காக - இன்னும் அவர்களிடமுள்ளவற்றை அவர் சூழ்ந்தறிந்து கொண்டிருப்பதுடன், அவர் சகல பொருளையும் எண்ணிக்கையால் (19) எண்ணி வைத்து இருக்கிறார்" 7+2+2+8=19.

அல்ஹம்துலில்லாஹ்!

75:1-II

**1. உயிர்த்தெழுதற்குரிய நாளின் மீது நான் ஆணையிடுகிறேன்.**

**2. குறைகூறும் ஆத்மா மீதும் நான் ஆணையிடுகிறேன்**

**3. நாம் அவனது எலும்புகளை ஒன்று சேர்த்து அவனை உருவாக்க மாட்டோம் என மனிதன் நினைக்கிறானா?**

**4. ஆம் நிச்சயமாக; அவனது விரல் நுனியையும் திரும்ப அமைக்க நம்மால் முடியும்.**

**5. ஆனால் மனிதன் தன் கண்முன்னால் பார்ப்பது எதுவோ அதை மட்டும் நம்புகிறான்.**

**6. அவன் உயிர்த்தெழுதற்குரிய நாளைப் பற்றி சந்தேகப்படுகிறானா?**

**7. பார்வை கூர்மையாகும்போது**

**8. சந்திரன் மறைக்கப்படும்போது**

**9. சூரியனும் சந்திரனும் ஒன்றோடு ஒன்று மோதி நொறுங்கும்போது**

**10. "தப்பிச் செல்ல வழி எங்கே" உள்ளது என்று மனிதன் அந்தநாளில் சொல்லுவான்**

**II. நிச்சயமாக அங்கே தப்பிச் செல்ல வழி இல்லை.**

## Sura 2: The Heifet (Al-Baqarah)

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

*Discouraging Capital Punishment*

**மரண தண்டனை ஊக்குவிக்கப் படவில்லை**

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِى الْقَتْلٰى الْحُرُّ بِالْحُرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ وَالْاُنْثٰى بِالْاُنْثٰى فَمَنْ عُفِىَ لَهٗ مِنْ اَخِيْهِ شَىْءٌ فَاتِّبَاعٌ بِالْمَعْرُوْفِ وَاَدَآءٌ اِلَيْهِ بِاِحْسَانٍ ذٰلِكَ تَخْفِيْفٌ مِّنْ رَّبِّكُمْ وَرَحْمَةٌ فَمَنِ اعْتَدٰى بَعْدَ ذٰلِكَ فَلَهٗ عَذَابٌ اَلِيْمٌ

178. O you who believe, equivalence is the law decreed for you when dealing with murder - the free for the free, the slave for the slave, the female for the female. If one is pardoned by the victim's kin, an appreciative response is in order, and an equitable compensation shall be paid. This is an alleviation from your Lord and mercy. Anyone who transgresses beyond this incurs a painful retribution

178. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், கொலைக்கு எதிரான நடவடிக்கையின் போது சமநீதி என்பதே சட்டமாக உங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது-சுதந்திரமானவருக்குச் சுதந்திரமானவர், அடிமைக்கு அடிமை, பெண்ணுக்குப் பெண். பலியானவரின் உறவினரால் ஒருவர் பிழை பொறுத்துக் கொள்ளப்பட்டால், நன்றியறிதலான ஒரு நடத்தை வழக்கத்தில் உள்ளது, எனவே நியாயமானதொரு நஷ்டஈடு செலுத்தப்பட வேண்டும். இது உங்களுடைய இரட்சகரிடமிருந்தொரு துயர் துடைப்பாகவும், கருணையாகவும் உள்ளது. இதற்கப்பாலும் வரம்புமீறுகின்றவர் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகின்றார்.

وَ لَكُمْ فِى الْقِصَاصِ حَيٰوةٌ يّٰاُولِى الْاَلْبَابِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

179. Equivalence is a life saving law for you, O you who possess intelligence, that you may be righteous.

179. சமநீதி என்பது உங்களுக்கு ஓர் உயிர் காக்கின்ற சட்டமாக உள்ளது, அறிவுத்திறன் உடையவர்களே உங்களைத்தான், நீங்கள் நன்னெறியாளர்களாக இருக்கும் பொருட்டு.

Write A Will

ஒரு உயில் எழுதுங்கள்

كُتِبَ عَلَيْكُمْ اِذَا حَضَرَ اَحَدَكُمُ الْمَوْتُ اِنْ تَرَكَ خَيْرَا الْوَصِيَّةُ لِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ بِالْمَعْرُوْفِ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ

180. It is decreed that when death approaches, you shall write a will for the benefit of the parents and relatives, equitably. This is a duty upon the righteous.

180. மரணம் நெருங்கி வரும் போது, பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுடைய நலனுக்காக நீதமாக நீங்கள் உயில் ஒன்றை எழுத வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. நன்னெறியாளர்கள் மீது இது ஒரு கடமையாக உள்ளது.

فَمَنْ بَدَّلَهٗ بَعْدَمَا سَمِعَهٗ فَاِنَّمَآ اِثْمُهٗ عَلَى الَّذِيْنَ يُبَدِّلُوْنَهٗ اِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ

181. If anyone alters a will he had heard, the sin of altering befalls those responsible for such altering. God is Hearer, Knower.

181. எவரேனும் தான் செவியேற்ற ஓர் உயிலை மாற்றியமைப்பாராயின், இத்தகைய மாறுதலுக்குப் பொறுப்பானவர்கள் மீதே மாற்றியதற்கான பாவம் நேரிடுகின்றது. கடவுள் செவியேற்பவர், அறிந்தவர்.

فَمَنْ خَافَ مِنْ مُّوْصٍ جَنَفًا اَوْ اِثْمًا فَاَصْلَحَ بَيْنَهُمْ فَلَا اِثْمَ عَلَيْهِ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

182. If one sees gross injustice or bias on the part of a testator, and takes corrective action to restore justice to the will, he commits no sin. God is Forgiver, Most Merciful.

182. உயில் எழுதியவரின் பக்கம் பெரும் அநீதியையோ அல்லது பாரபட்சத்தையோ ஒருவர் கண்டு, உயிலின் பால் நீதியை மீட்டுக் கொண்டு வர சீர் செய்கின்ற நடவடிக்கை எடுத்தால், அவர் பாவம் எதுவும் செய்து விடவில்லை. கடவுள் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662